

நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில், குன்னூர் சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெற்ற நீலகிரி மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் கே.எம். ராஜ் கோத்தகிரி ஒன்றியம் மற்றும் கோத்தகிரி பேரூர் கழக பகுதிகளில் கழக நிர்வாகிகளுடன் சென்று வாக்களித்து வெற்றிபெறச் செய்த வாக்காளப் பெருமக்களுக்கு நன்றி தெரிவித்தார்.

## மனம் வெறுத்து தூற்றுவதாக இருக்கக் கூடாது!

# ஆட்சி மாற்றம் என்பது மக்களுக்கு ஏற்றத்தைத் தர வேண்டும்!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, மே. 26 -

மனம் வெறுத்து தூற்றுவதாக இருக்கக் கூடாது. ஆட்சி மாற்றம் என்பது மக்களுக்கு ஏற்றத்தை தர வேண்டும் என்று தினகரன் நாளேடு வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து ‘தினகரன்’ நாளேடு தலையங்கம் வருமாறு:-

“பெண்களுக்கும், சிறுமிகளுக்கும் கடந்த ஆட்சியில் போதுமான பாதுகாப்பில்லை. அவர்களின் பாதுகாப்பிற்காக பல்வேறுசிறப்புதிட்டங்களை கொண்டு வருவேன். தமிழகத்தின் எந்த ஒரு மூலையிலும் பெண்கள், சிறுமிகளுக்கு எதிரான குற்றங்கள் எதுவும் நடக்காத வகையில் சிறப்பு திட்டங்கள் வகுக்கப்படும்,” என்பது தமிழக வெற்றிக்கழக தலைவர் விஜய் யின் தேர்தல் பிரசார கூட்டங்களில், காதுகள் அனைத்திலும் வந்து மோதிய ஒரு உறுதிமொழி. இதை நம்பி, அவரது கட்சிக்கு வாக்களித்தவர்க ளில் கணிசமான வர்கள் பெண்கள். கடந்த 10ம் தேதி, தமிழக முதல்வராக பொறுப்பேற்ற விஜய் பெண்கள் பாதுகாப்பிற்காக சிறப்பு சிங்கப்படை அமைக்கப்படும் என்பது, அவர் கையெழுத்திட்ட முக்கிய மூன்று



தினகரன்

மே 24, 2026 ஞாயிற்றுக்கிழமை

ரீல்ஸ் ரியல் ஆகுமா?

“பெண்களுக்கும், சிறுமிகளுக்கும் கடந்த ஆட்சியில் போதுமான பாதுகாப்பில்லை. அவர்களின் பாதுகாப்பிற்காக பல்வேறு சிறப்பு திட்டங்களை கொண்டு வருவேன். தமிழகத்தின் எந்த ஒரு மூலையிலும் பெண்கள், சிறுமிகளுக்கு எதிரான குற்றங்கள் எதுவும் நடக்காத வகையில் சிறப்பு திட்டங்கள் வகுக்கப்படும்,” என்பது தமிழக வெற்றிக்கழக தலைவர் விஜய் யின் தேர்தல் பிரசார கூட்டங்களில், காதுகள்

கோப்புகளில் ஒன்றாக இருந்தது.

இதற்காக சிலாகித்து முதல்வருக்கு பாராட்டு பத்திரம் வாசித்தன பெண்ணிய மேம்பாட்டு அமைப்புகள். ஆனால் அடுத்தடுத்த நாட்களில் நடந்த சம்பவங்கள், இது ஒரு வெற்று வாய்ஜால” அரசு என்பதை வெளிச்சம் போட்டு காட்டி விட்டது. சென்னை மெரீனாவில் மனநிலை பாதிக்கப்பட்ட சிறுமி பலாத்காரம், வந்தவாசியில் ஓடும் லாரி யில் சிறுமி கூட்டு பலாத்காரம், கிருஷ்ணகிரியில் காவல்நிலைய பெண் ஊழியர் பலாத்காரம் என்று அடுத்தடுத்து நிகழ்ந்த அவலங்கள், இதற்கு சாட்சியமாக அமைந்தது. இவை அனைத்திற்கும் உச்சமாக அரங்கேறியுள்ளது கோவையில் நடந்த பத்து வயது பள்ளி மாணவிக்கு நடந்த பலாத்கார படுகொலை சம்பவம்.

சூலூர் பகுதியில் தனது வீட்டிற்கு அருகே விளையாடிக் கொண்டிருந்த 10 வயது சிறுமி, அதே பகுதியை சேர்ந்த சிலரால் கடத்தி செல்லப் பட்டு, பலாத்காரம் செய்யப்பட்டுள்ளார். பின்னர், அவர் கொடூரமாக படுகொலை செய்யப்பட்டு அங்குள்ள குளக்கரையில் வீசப்பட்டு கிடந்தார்.

ஊடகங்களில் இந்த தகவல் வெளியாகி, தமிழ கம் முழுவதும் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தி யது. ஆனால் தமிழக முதல்வரின் கட்டுப்பாட்டில் இருக்கும் காவல்துறையோ, புகார் கொடுத்த பெற்றோரை சமாதானம் செய்யும் வேலையில் தான் முதலில் இறங்கியுள்ளது. சிறுமியை கண்டு பிடித்து நெருங்கி விட்டோம். இன்னும் சில மணி நேரங்களில் மீட்டு விடுவோம் என்று பொய்யான உறுதியளித்தது. ஆனால், சிறுமியின் உயிரற்ற உடலை மட்டுமே அவர்களால் மீட்க முடிந்தது. இதனால் கொதித்தெழுந்த மக்கள், அரசுக்கு எதிராக பெரும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள னர். இதன் எதிரொலியாக, சிறுமியின் பக்கத்து வீட்டை சேர்ந்த 2 பேர் கைது செய்யப்பட்டுள்ள னர். ஆனால், மரணித்து போன ஏதுமறியாத அந்த சிறுமிக்காக, சிறிய வருத்தத்தை கூட உடனடியாக பதிவு செய்யவில்லை முதல்வர். தற்போது எதிர்கட்சிகளின் கடும் கண்டனத்தை எதிர்கொள்ள முடியாமல், கண் துடைப்புக்கு அறிக்கை ஒன்றை நேற்று மாலை வெளியிட்டுள்ளார்.

இவர் அரியணை ஏற வேண்டும் என்று ஆசைப்பட்ட கோடி மழலைகளில் ஒருவருக்கு தான், இந்த கொடூரம் நேர்ந்துள்ளது என்பதை, முதல்வர் சிறிதேனும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இனிமேலும் இது போன்ற கொடூர நிகழ்வுகள் தொடராத வண்ணம், முதல்வர் சாட்டையை சுழற்ற வேண்டும். வெறுமனே ரீல்ஸ் அரசாக இல்லாமல் ரியல் அரசாக உருவெடுக்க வேண்டும். மொத்தத்தில் மாற்றம் ஒன்று தான் மாறாதது என்பது இயற்கையின் நியதி. ஆனால், ஆட்சி அதிகாரத்தில் மாற் றம் என்பது, மக்களுக்கு ஏற்றத்தை தர வேண்டும். மனம் வெறுத்து தூற்றுவதாக இருக்கக்கூடாது. இதை முதல்வரும், புதிய அரசும் புரிந்து செயல்பட வேண்டியது காலத்தின் கட்டாயம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சென்னையில் பெண் தூய்மைப் பணியாளர் மீது தாக்குதல்!

சென்னை, மே. 25-

சென்னை, அன்னை சத்யா நகரை சேர்ந்த மாரியம்மாள், 35, திருவொற்றியூர் மண்டலத்தில், ஒப்பந்த அடிப்படையில், தூய்மைப் பணியாளராக வேலை பார்த்து வருகிறார்.

இவர், முன்அனுமதியுடன் நான்கு நாள் விடுப்பு எடுத்துள்ளார். விடுப்பு முடிந்து நேற்று முன்தினம் இரவு, திருவொற்றியூர் மண்டல அலுவலகம் எதிரே, வழக்கம் போல் தூய்மைப் பணியில் ஈடுபட்டுள்ளார்.

பணியில் அப்போது, அங்கு வந்த மேற்பார்வையாளர்கள் விடுப்பு எடுத்தது தொடர்பாக மாரியம்மாளை விசா ரித்தனர்.

அப்போது, மாரியம்மாளுக்கும், மேற்பார்வையாளர்களுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டதாக தெரிகிறது.

தான் தாக்கப்பட்டதாக கூறி, பெண் தூய்மை பணியாளர், ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இதுகுறித்து, மாரியம்மாள் கூறியதாவது:

தூய்மைப் பணியாளராக பேட்டரி வாகனம் ஓட்டும் வேலை செய்கிறேன்; உடல்நலக் குறைவால், உயர் அதிகாரிகளின் அனுமதி பெற்று, நான்கு நாட்களாக விடுப்பு எடுத்திருந்தேன். மருத்துவமனை ரசீதை காண்பித்தும் அலட்சியப்படுத்தினர்.

விடுப்பு எடுத்ததற்கு, 1,000 ரூபாய் தர வேண்டும் என, மேற்பார் வையாளர்கள் கூறினர்.

விடுப்பு எடுத்ததற்கு 1,000 ரூபாய் கேட்டால் எப்படி தர முடியும்.

தொடர்ந்து, வார விடுமுறைக்கு 300 ரூபாயும், அவசர தேவைக்கு விடுப்பு கேட்டால் 500 ரூபாயும் கேட்டனர். இல் லாவிடில், வேலைக்கு வரக்கூடாது என்றனர்.

‘குப்பை பொறுக்கும் நாய்’ என திட்டியும், பேனாவால் குத்தியும், தாக்குதல் நடத்தினர். உன்னை வேலையை விட்டு தூக்கி விட் டோம் என்றனர். பாலியல் ரீதியாகவும் தொந்தரவு கொடுத்தனர். இந்த வேலையை நம்பிதான் என் குடும்பம் உள்ளது; எனக்கு வேலை வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.



பவானி சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் பவானி கே.சந்திரசேகர் பவானி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அனைத்து ஊராட்சி, பேரூராட்சி நகராட்சியில் வாக்களித்த வாக்காளர்களுக்கு வீதி வீதியாகச் சென்று நன்றியினை தெரிவித்தார். நிகழ்வில் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# அடுத்த தலைமுறைக்கும் தி.மு.க.வை கடத்துங்கள்!



**இ**ன்றைக்குச் சரியாக ஏழு ஆண்டுகளுக்கு முன்பாகவே... அதாவது 2019ஆம் ஆண்டில்... திருச்சியில் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தல் வெற்றிக்கான நன்றி தெரிவிக்கும் கூட்டத்தில் உரையாற்றிய கழகத்தின் இளம் தலைவர், இன்றைய தமிழ்நாடு அரசு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்...

அதிரடியாக ஒரு கோரிக்கையை அதே மேடையில் அமர்ந்திருந்த கழக தலைவரிடம் வைத்தார். அதாவது, நாங்குநேரி சட்டமன்ற இடைத்தேர்தலில் அது காங்கிரஸ் முன்பு வென்ற தொகுதியாக இருந்தாலும் கூட அதில் தி.மு.க. களமிறங்க வேண்டும் என்றும்...

அடுத்து வரும் சட்டமன்ற பொதுத் தேர்தலில் தி.மு.க. இதுவரையிலும் பெற்ற வெற்றிச் சாதனையை விஞ்சும் அளவுக்கான தொகுதிகளில் போட்டியிட வேண்டும் என்றும், யாருமே எதிர்பாராத வகையில் கோரிக்கை வைத்தார்..!

இதில் ஒரு நுணுக்கமான விஷயம் அடங்கியிருக்கின்றது. தி.மு.க. மிக அதிக பட்சமாக தமிழகத்தில் வென்ற இடங்கள் 184. அந்த சாதனையை 1971ஆம் ஆண்டு நிகழ்த்தியவர் தலைவர் கலைஞர். அதன் பிறகு அந்த சாதனையை இன்று வரையிலும் யாருமே அருகில் கூட நெருங்கிவிட முடியவில்லை..!

ஆகவே மீண்டும் நாம் கலைஞரின் அந்த இமாலய சாதனையை எட்டிப் பிடிக்கவோ அல்லது தொட்டுத் தாண்டிடவோ வேண்டுமானல், தி.மு.க. வரும் சட்டமன்ற பொதுத் தேர்தலில் குறைந்த பட்சம் 200 தொகுதிகளிலாவது போடியிட வேண்டும்..!

அப்பொழுது உதயநிதி அவர்களை அவரது ரசிகர்கள் யாராவது மூன்றாம் கலைஞர் என்றோ, இளம் கலைஞர் என்றோ... பட்டமளித்து பதிவுகள் செய்தாலோ அல்லது பேனர் வைத்தாலோ... இங்கு ஒரு சிறு கூட்டம் பொங்கி எழுவது வாடிக்கை...!

இதில் வேடிக்கை என்ன வென்றால், வளர்ந்து வரும் ஒவ்வொரு அரசியல் தலை வரும் தன்னை மூன்றாம் கலைஞர், முப்பதாம் கலைஞர், முன்னூறாம் கலைஞர் என்று உருவகப் படுத்திக் கொள்வாரே யானால்... அந்த பெருமை முழுக்க கலைஞரையே சாரும் என்பதை இவர்கள் உணர்ந்து கொள்ளவில்லை என்பது தான்..!

**சௌமியன் வைதியநாதன்**
**கழக இலக்கிய அணி துணைச் செயலாளர்**



போகட்டும் விஷயத்திற்கு வருவோம்...

காங்கிரஸ் வென்ற தொகுதியில் தி.மு.க. நிற்க வேண்டும் என்று சொல்கின்றாரே.... 200 தொகுதிகளில் தி.மு.க. போட்டியிட வேண்டும் என்கிறாரே..?!

இவருக்கு கூட்டணி தர்மம் என்றால் என்னவென்று தெரியுமா? கூட்டணி கட்சிகளின் பலம் என்னவென்று தெரியுமா? கூட்டணி கட்சிகள் தயவில்லாமல் வென்று விட இயலாது என்பது இவருக்கு தெரியாதா? இது தலைவர் தளபதியாருக்கு நெருக்கடியை ஏற்படுத்தாதா? நம்முடைய உயரம் என்ன வென்று இவருக்கு தெரிந்திருக்க வேண்டாமா?

இப்படி சிறுபிள்ளைத் தனமாக பேசுகின்றாரே?! தேர்தல் அரசியல் பற்றிய முழு புரிதல் இல்லாமல் பேசுகின்றாரே...?!

என்றெல்லாம் ஒரு பக்கம் ஆங்காங்கே நடுநிலை முகமூடியோடு வலம் வரும் தி.மு.க. எதிர்ப்பாளர்கள் திமுகவுக்காக நீலிக் கண்ணீர் வடிப்பதையும்... அதை விவரம் புரியாத சில அப்பாவி திமுகவினர் ஏற்றுக்கொண்டு அங்கலாய்ப்பதையும் நாம் பரவலாக இந்த இணையத்தில் கண்டோம்..!

ஆனால் இந்த நல்லவர்களும், நடுநிலையாளர்களும் அப்பொழுது உதயநிதிக்கு எதிராக கேட்ட அத்தனை கேள்விகளையும்....

இன்றைக்கு மிகச் சரியாக அறுபத்தியேழு ஆண்டுகளுக்கு முன்பாக... அதாவது 1959 ஆம் ஆண்டு.... அன்றைக்கு வெறும் 35 வயதேயான கலைஞர் கருணாநிதி என்ற இளைஞரைப் பார்த்து ஒட்டுமொத்த திமுகவும் கேட்டது, கட்சியினர் மட்டுமல்ல கழக தலைமையான பேரறிஞர் அண்ணாவே கேட்டார்...!

ஊடகங்கள் எள்ளி நகையாடின..!

ஆம்... அப்பொழுது தி.மு.க. சந்தித்திருந்தது ஒரே ஒரு பொதுத் தேர்தலைத் தான்... அதில் வெறும் 15 பேர் மட்டுமே சட்டமன்றம் சென்றிருந்தனர்....

அந்த நிலையில்தான், சென்னை மாநகராட்சிக்கான தேர்தல் வருகிறது. கழகத்தின் சார்பில் முதன் முதல் வெற்றி பெற்ற 15 சட்டமன்ற உறுப்பினர்களில் கலைஞரும் ஒருவர் என்பதால்....

சட்டமன்றத்திலும் அவரது செயல்பாடுகள் மிகப் பிரசித்தம் என்பதால்....

அந்த சென்னை மாநகராட்சி தேர்தலுக்கான தேர்தல் பணிக்குழு தலைவராக கலைஞரை பேரறிஞர் அண்ணா அவர்கள் நியமித்தார்..!

மொத்த வார்டு எண்ணிக்கை அப்பொழுது 100. அதில் அப்பொழுது பலம் மிக்க கட்சியான காங்கிரஸ் 100 தொகுதிகளுக்கும் வேட்பாளர்களை அறிவித்திருந்தது..!

காங்கிரஸுக்கு அடுத்த பலம் பொறுந்திய கட்சிகளாக அன்றைக்கு இருந்த கம்யூனிஸ்ட், சோஷலிஸ்ட் போன்ற கட்சிகள் எல்லாம் 20க்கும் குறைவான தொகுதிகளிலேயே வேட்பாளர்களை அறிவித்திருந்தன...!

அந்த இரண்டாம் நிலை கட்சிகளை விட இளம் கட்சியான... பலம் குறைந்த கட்சியாக கருதப்பட்ட தி.மு.க.... 20 இடங்களிலாவது வேட்பாளர்களை நிறுத்தும் என்று ஊடகங்கள் உட்பட அண்ணாவே எண்ணியிருந்த நிலையில்....

தேர்தல் பணிக்குழு தலைவரான கலைஞர்... 90 தொகுதிகளுக்கான வேட்பாளர் பட்டியலை பொதுச் செயலாளர் அண்ணாவிடம் சமர்ப்பிக்கின்றார்..!

அந்த பட்டியலைப் பார்த்த அண்ணாவோ அந்த பட்டியலை கோபமாக வீசி எறிகின்றார். அகலக் கால் வைத்து அழிந்து போய் விடக் கூடாது என்பது அவரது வாதம். 20 தொகுதிகளுக்கு மட்டும் வேட்பாளர் பட்டியல் கொடு என்கிறார். கலைஞரோ அதை ஏற்றுக்கொள்வதாக இல்லை... அன்று இரவு முழுவதும் அண்ணாவை சமாதானம் செய்து, தனது வியூகங்களை எடுத்துச் சொல்லி நிச்சயம் வென்று காட்டுவோம்...

செயிண்ட் ஜார்ஜ் கோட்டையை பிடிக்கும் முன்பாக சென்னை மாநகராட்சி ரிப்பன் கோட்டையை பிடிப்போம் என்று வாதங்களை எடுத்து வைத்து... அண்ணாவிடம் மறுநாள் காலையில் சம்மதத்தையும் பெற்று விடுகின்றார் கலைஞர்...!

நாற்பது தொகுதிகளுக்கு மேல் வென்று விட்டால் எனக்கு என்ன தருவீர்கள் என்று கலைஞர் கேட்க... உனக்கு ஒரு பவுனில் மோதி ரம் போடுகிறேன் என்று அண்ணா கூறுகிறார்.

ஆனால் கலைஞர் தனது கடும் முயற்சியினாலும், உழைப்பினாலும் வென்றெ டுத்தது... 45 தொகுதிகள்.... காங்கிரஸ் வென்றதோ வெறும் 23 தொகுதிகள்..!

தி.மு.க.வின் அ.பொ. அரசு சென்னை மாநகராட்சியின் முதல் கழக மேயராக பொறுப்பேற்கின்றார்..!

அந்த வெற்றி விழா மேடையில் பேசிய அண்ணா... தம்பி கருணாநிதி நிச்சயம் 40ல் வெல்ல மாட்டான் என்ற நம்பிக்கையிலேயே ஒரு பவுன் மோதிரத்துக்கு சம்மதித்தேன்... ஆனால் என் மனைவிக்கு கூட கடையில் சென்று தங்க ஆபரணம் வாங்கித் தந்திராத நான்... இன்றைக்கு கடை கடையாக ஏறி என் தம்பி கருணாநிதிக்கு இந்த மோதிரத்தை வாங்கி வந்தேன் என்று கூறி அதை அணிவிக்கின்றார்..!

அந்த மோதிரம் கலைஞரின் எத்தகைய முக்கியமான பொக்கிஷம் என்பதை ஒவ்வொரு தி.மு.க.வினரும் அறிவர்..!

ஏழு ஆண்டுகள் முன்பாக, அதேப் போன்று... அடுத்த சட்டமன்ற தேர்தலில் அதாவது 2021 தேர்தலிலேயே, 200 தொகுதிக்கு குறையாமல் தி.மு.க. போட்டியிட வேண்டும் என்று பகிரங்கமாக பொது மேடையில் கழக தலைவரிடம் கோரிகை வைத்த...

கழக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை....

வாருங்கள் இளம் கலைஞரே.... கலைஞரின் அந்த இளம் வயது வேகத்துடனும், துடிப்புடனும், விவேகத்துடனும், சுறுசுறுப்புடனும், அதிரடியுடனும்... கழகத்தை உச்சாணிக் கொம்பில் ஏற்றி நிறுத்துங்கள் என்று....

அன்றைக்கு நீங்கள் வைத்த கோரிக்கையை காலம் இன்றைக்கு இயற்கையாகவே கழகத்தின் கரங்களில் கொடுத்திருக்கிறது. அடித்து ஆடுங்கள். அடுத்த தலைமுறைக்கும் தி.மு.க.வை கடத்துங்கள்...!

கலைஞரின் அனாடமி வாரிசு மட்டுமல்ல.... அரசியல் வாரிசு என்று உலகிற்கு உரக்கச் சொல்லுங்கள்... கட்டளையிடுங்கள், காத்திருக்கிறோம் களத்தில் சுற்றிச் சுழன்று எதிரிகளை துரந்தர்களாக நின்று துரத்துவதற்கு...




2026 தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் மடத்துக்குளம் சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் கழக வேட்பாளராக போட்டியிட்ட இரா.ஜெயராமகிருஷ்ணனை அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்த கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகளுக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டம் மாவட்ட கழக பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தொகுதி பொறுப்பாளர், மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளை கழக செயலாளர்கள், பாக முகவர்கள் பலர் கலந்து கொண்டனர்.



மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியில் வெற்றி பெற்ற இரா.ஜெயராமகிருஷ்ணன் திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி தலைமையில் உடுமலை கிழக்கு ஒன்றியம், கண்ணமநாயக்கனூர் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தொகுதி மக்களை சந்தித்து நன்றி தெரிவித்தார். இதில் ஒன்றிய கழகப் பொறுப்பாளர் ஈ.கே.மாரிமுத்து உள்பட மாநில, மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், கிளைக் கழக செயலாளர்கள், பாக முகவர்கள் பலர் கலந்து கொண்டனர்.